*செய்தி வெளியீடு*

செ.வெ.எண்:27 நாள்:13.12.2017

**நீலகிரி மாவட்டம் தூனேரி ஊராட்சிக்குட்பட்ட அணிக்கொரை கிராம சமுதாய கூடத்தில் இன்று (13.12.2017) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற மனுநீதி நாள் மக்கள் தொடர்பு முகாமில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

நீலகிரி மாவட்டம் தூனேரி ஊராட்சிக்குட்பட்ட அணிக்கொரை கிராம சமுதாய கூடத்தில் இன்று (13.12.2017) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற மனுநீதிநாள் மக்கள் தொடர்பு முகாமில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியதாவது,

இம்மனுநீதி நாள் முகாமில் அரசு சார்ந்த எல்லா துறை அதிகாரிகளும் உங்களை தேடி வந்துள்ளனர். அரசு நமக்காக எத்தனையோ திட்டங்களை தீட்டி அதை செம்மையாக செயல்படுத்தி வருகிறது. மாவட்ட நிர்வாகம் பிளாஸ்டிக் பயன்பாட்டை ஒழிப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. மேலும் உன்னத உதகை என்ற திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. எனவே பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் அவர்கள் கேட்டுக்கொண்டார். இம்மாவட்டத்தை மேலும் பசுமையாகவும், சுத்தமாகவும் வைக்க அனைத்து பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். குப்பைகளை தெருக்களிலும் வடிகால்களிலும் போடாமல், கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள குப்பை குழியில் மக்கும் குப்பைகளை கொட்டி மக்காத குப்பைகளை ஊராட்சி மூலம் பணியமர்த்தப்பட்டுள்ள தூய்மை காவலர்களிடம் வழங்கி ஒத்துழைப்பு வழங்குமாறும், இயற்கை விவசாயம் நிறைந்த முழுமையான மாவட்டமாக நமது நீலகிரி மாவட்டம் இருக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கிராமத்தில் 1 ஜிஎப் திட்டத்தின் கீழ் 2 பணிகள் 30 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது. 14 வது நிதி திட்டத்தின் அடிப்படையில் 6 பணிகள் 20 இலட்சம் மதிப்பில் எடுக்கப்பட்டுள்ளது. அதில் 10 இலட்சம் அம்மா பூங்காவிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 2016-2017 ஆம் ஆண்டில் பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் 2 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மகாத்மா ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் 61 பணிகள் ரூ.86 இலட்சம் மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளது. 2 இலட்சம் மதிப்பில் போர்வெல் அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது. 2017-2018 ஆம் ஆண்டில் 4 பணிகள் 7.5 இலட்சம் மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு மகாத்மா ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் 77 பணிகள் ரூ.35 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வருகிறது. 14 வது நிதி திட்டத்தின் கீழ் 8 பணிகள் தெவிட்டு முக்கு, சாமிநாதபுரம், அம்பேத்கார் நகர், கணபதி நகர் ஆகிய பகுதிகளில் கால்வாய் மற்றும் நடைபாதை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.மாவட்ட நிர்வாக வளர்ச்சிக்காக மாவட்ட நிர்வாகம் எடுக்கக்கூடிய அனைத்துவித நடவடிக்கைகளுக்கும் தூனேரி கிராம மக்கள் முழுமையான ஒத்துழைப்பு கொடுக்கின்றனர். எனவே எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது என தெரிவித்தார்.

இம் மக்கள் தொடர்பு மனுநீதி நாள் முகாமில் முதியோர், முதிர்கன்னி, விதவை, உழவர்பாதுகாப்பு திட்ட உதவி தொகையாக ஒரு பயனாளிக்கு ரூ.1,000/- வீதம் 16 பயனாளிகளுக்கு ரூ.16,000/-மும், மாவட்ட முன்னோடி வங்கி மூலம் 3 பயனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை, சுய உதவிக்குழுக்களுக்கு கடனுதவி, வாகன கடன் என ரூ.13,30,000/- இலட்சம் மதிப்பில் கடனுதவிகளும் வழங்கப்பட்டுள்ளது.

இம்மனுநீதி நாள் மக்கள் தொடர்பு முகாமில் பொதுமக்களிடமிருந்து 105 மனுக்கள் பெறப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.முருகேசன் அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.